# பத்திரிக்கை செய்தி

## மின் இணைப்புகளை மாற்று பாதையில் கொண்டு செல்ல லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய மின் பொறியாளருக்கு 3 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.பச்சையப்பன், வடுகபாளையம், திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனக்கு சொந்தமான கட்டிடத்தை விரிவாக்கம் செய்ய வீட்டின் மேல் சென்ற மின்கம்பிகளை மாற்றுப்பாதையில் கொண்டு செல்ல வேண்டி விண்ணப்பித்திருந்தார். திரு.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், குடிமங்கலம் மின்வாரிய அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் மின்கம்பிகளை மாற்றுப்பாதையில் கொண்டு செல்ல தனக்கு ரூ.2,700/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருப்பூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2008ம் வருடம் மேற்கொள்ளப்பட்டு திரு.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.2,700/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது திருப்பூர் விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் நேற்று 03.04.2025 திரு.பன்னீர்செல்வம், முன்னாள் இளநிலை பொறியாளருக்கு 3ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.